செய்தி வெளியீடு எண்.22-2016 நாள்: 12.07.2016

## “பாரத பிரதமரின் வீட்டு வசதி திட்டம்” விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் செயல்படுத்த தகுதி வாய்ந்த பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் அறிவிப்பு.

******

நகர்புற மேம்பாட்டிற்காக மாவட்ட அளவிலான ஏழை மற்றும் குறைந்த வருவாய் ஈட்டும் குடும்பங்களுக்கு மத்திய அரசால் அனைவருக்கும் வீட்டு வசதி வழங்கும் பொருட்டு “பாரத பிரதமரின் வீட்டு வசதி திட்டம்” பேரூராட்சியில் செயல்படுத்த தகுதி வாய்ந்த பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

மேற்கூறிய திட்டத்தின் 4 உட்கூறுகளில் ஒன்றான “கடனுடன் இணைக்கப்பட்ட மான்ய திட்டம்” (Credit Linked Subsidy Scheme) அடிப்படையில் வீடு வழங்கும் திட்டம் மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 3 லட்சத்திற்கு குறைவான வருவாய் உள்ள பிரிவினருக்கும் 6.5%-க்கு மேற்படும் வட்டிக்கு மான்யத்துடன் அதிகப்படியாக 30 ச.மீ. (323 ச.அ.) பரப்பளவு கொண்ட EWS வீடும், 3 முதல் 6 லட்சம் வரை வருவாய் உள்ள பிரிவினருக்கு 6.5%-க்கு மேற்படும் வட்டிக்கு மான்யத்துடன் அதிகபட்சம் 60 ச.மீ. (646 ச.அ.) பரப்பளவு கொண்ட LIG வீடு வழங்க உத்தேசித்துள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழும் தகுதியுள்ளவர்கள், சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலரை தொடர்பு கொண்டு உரிய படிவத்தல் குறிப்பிட்ட ஆவணங்களுடன் விண்ணப்பித்து கொள்ளலாம். மேலும், விவரங்களுக்கு விழுப்புரம் மாவட்ட வலைதளத்தை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.